بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *13/06/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**மக்கா வெற்றியடைந்த போரில் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை நெறிமுறை பற்றிய குறிப்பும் ஈரான், இஸ்ரேல் போரை முன்னிட்டு துஆக்கள் செய்வதற்கான அறிவுரையும்**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

சில வாரங்களுக்கு முன்பு மக்கா வெற்றியைப் பற்றிய தொடக்க நிலையை எடுத்துக் கூறியிருந்தேன். இன்று அது தொடர்பாக இன்னும் அதிகமான விவரங்களைக் கூறுவேன். இந்தப் போருக்கான காரணம் தொடர்பாக குறிப்பிடப்படுவது என்னவெனில், ஹுதைபிய்யாவில் செய்திருந்த அந்த உடன்படிக்கையை குரைஷியர்கள் முறித்து விட்டனர் என்பதே இந்த அவசர நிலைக்குக் காரணமாயிற்று என்பதாகும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் செய்தி அனுப்பும் தூதுவரிடம், பெரிய ஆணவமான முறையில் நாங்கள் உடன்படிக்கையை முடித்து விடுகிறோம். மேலும் நாங்கள் முஹம்மது {ஸல்} அவர்களுடன் போரிடுவோம் என்று கூறி விட்டார்கள். இந்தச் செய்தி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தபோது அவர்கள் மக்காவை நோக்கி சென்றார்கள்.

குரைஷியர்கள் உடன்படிக்கையை முறித்துக் கொண்டதன் விவரம் என்னவெனில், ஹுதைபிய்யா உடன்படிக்கை நடந்தபோது அதில், அரபு கோத்திரங்களிலிருந்து எவர் விரும்புகிறாரோ அவர், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளட்டும். மேலும் எவர் விரும்புகிறாரோ அவர், குரைஷியர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளட்டும் என்ற ஒரு நிபந்தனையும் இருந்தது. அதன்படி, புனித இடத்தைச் சுற்றி குடியிருந்த بَنُوْ بَكْر (பனூ பக்ர்) மற்றும் بَنُوْ خُزَاعَه (பனூ குஸாஆ) கோத்திரங்களில் بَنُوْ خُزَاعَه (குனூ குஸாஆ) ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். அவர்களுக்கு எதிராக இருந்த بَنُوْ بَكْر (பனூ பக்ர்) குரைஷியர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். மேலும் இரண்டு கோத்திரங்களும் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதிலிருந்து பாதுகாப்பாக இருந்து விட்டனர்.

அறியாமைக் காலத்தில் بَنُو خُزَاعَة (பனூ குஸாஆ) மற்றும் بَنُو بَكْر (பனூ பக்ர்) ஆகியோருக்கிடையில் சண்டை இருந்தது. அதில் بَنُو بَكْر (பனூ பக்ர்) கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் خُزَاعَة (குஸாஆ) கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவரை கொலை செய்தார். மேலும் بَنُو خُزَاعَة (பனூ குஸாஆ) கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் بَنُو بَكْر (பனூ பக்ர்) கோத்திரத்தைச் சேர்ந்த மூன்று பேரை (மக்கா, மதீனா எனும்) புனித இடத்தின் எல்லைக்குள் கொலை செய்திருந்தனர். بَنُو بَكْر (பனூ பக்ர்) மற்றும் بَنُو خُزَاعَة (பனூ குஸாஆ) இந்த நிலையிலேயே இருந்தனர். அதாவது அவர்களின் ஒருவருக்கொருவரிடம் சண்டைகள் தொடர்ந்து நடந்து வந்தன. அப்போது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். மக்கள் இஸ்லாத்தைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டு விட்டனர். புதிய விஷயம் அவர்களுக்கு முன்னால் வந்து விட்டது. அதைப் பற்றி பேசத் தொடங்கி விட்டனர். ஒருவர் மற்றவருடன் சண்டையிடுவதை நிறுத்திக் கொண்டனர். ஆனால் அவர்கள் உள்ளங்களில் வெறுப்பையும் கோபத்தையும் மறைத்து வைத்திருந்தனர்.

ஹிஜ்ரி 8-ஆம் ஆண்டு ஷஃபான் மாதம் வந்தபோது ஹுதைபிய்யா உடன்படிக்கை நடந்து 23 மாதங்கள் கடந்து சென்று விட்ட நிலையில், بَنُو بَكْر (பனூ பக்ர்) கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகத்துவம் தொடர்பாக வசைபாடி கவிதை எழுதினார். அதாவது அவமதித்தவாறு கவிதை பாடினார். بَنُو خُزَاعَة (பனூ குஸாஆ)வைச் சேர்ந்த ஓர் இளைஞர் அதைப் படிப்பதைக் கேட்டார். அப்போது அந்த நபர் அவரை அடித்து, அவரது தலையை உடைத்து விட்டார். இரு கோத்திரத்தாரிடையே முன்னரே பகைமை தொடர்ந்து வந்திருந்த நிலையில், இந்த நிகழ்வினால் இரு கோத்திரத்தாரிடையே சண்டை உருவாகி விட்டது.

இந்த அவமரியாதையான கவிதையை எழுதிய بَنُو بَكْر (பனூ பக்ர்) கோத்திரத்தைச் சேர்ந்தவர், பனூ பக்ர் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பமாகிய بَنُو نُفَاثَة (பனூ நுஃபாஸா)வின் நபராக இருந்தார். இந்த வசை பாடும் கவிதையை எழுதியவரை بَنُو خُزَاعَة (பனூ குஸாஆ) கோத்திரத்தின் ஓர் இளைஞர் காயப்படுத்தி விட்டபோது بَنُو بَكْر (பனூ பக்ர்) கோத்திரத்தைச் சேர்ந்த بَنُو نُفَاثَة(பனூ நுஃபாஸா) குடும்பம் குரைஷியர்களிடம் பனூ குஸாஆ

கோத்திரத்திற்கு எதிராக நபர்களையும், ஆயுதங்களையும் கொண்டு உதவி செய்யுமாறு விண்ணப்பித்தது.

அபூசுஃப்யானைத் தவிர குரைஷியர்கள் அவர்களுக்கு உதவி செய்வதற்கு தைரியமூட்டினர். அவர் ஆலோசனை வழங்கவுமில்லை; அவருக்கு அது பற்றி தெரிந்திருக்கவுமில்லை. அவருடன் ஆலோசனை செய்யப்பட்டிருந்தது; ஆனால் அவர் போர் செய்ய மறுத்து விட்டார் என்ற ஒரு கூற்றும் இருக்கிறது. ஆனால் அப்படியிருந்தும் குரைஷியர்கள் ஆயுதங்கள், குதிரைகள், மனிதர்கள் ஆகியவர்களைக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்தனர். بَنُو خُزَاعَه (பனூ குஸாஆ) கோத்திரத்தினர் தம்மைத் தற்காத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக (குரைஷியர்களாகிய) அவர்கள் அனைவரும் இரகசியமாக தாக்கினர். بَنُو خُزَاعَه பனூ குஸாஆ கோத்திரத்தினர் உடன்படிக்கையின் காரணமாக தம்மைத் தாமே பாதுகாப்பாக இருப்பதாகக் கருதிக் கொண்டிருந்தனர். மேலும் கவனமில்லாமல் இருந்தனர். குரைஷியர்கள், بَنُوبَكر(பனூ பக்ர்), بَنُونُفَاثَه (பனூ நுஃபாஸா) ஆகியோர் وَتِير (வதீர்) என்ற இடத்தில் சந்திப்பதாக வாக்குறுதி கொடுத்தனர். இது கண்ணியமிக்க மக்காவின் தாழ்தளத்திலுள்ள பகுதியாக இருந்தது. بَنُو خُزَاعَه (பனூ குஸாஆ) கோத்திரத்தாரின் வீடுகள் இந்த இடத்திலேயே இருந்தன. எதிரிகளாகிய இவர்கள் நியமிக்கப்பட்ட நேரத்தில் அங்கு சந்தித்தனர். குரைஷியர்களின் தலைவர்களும் மாறு வேடம் தரித்திருந்தனர். மேலும் முகமூடி அணிந்திருந்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் வரலாற்று அளவில் இதைக் கூறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர்கள் இவ்வாறு எழுதியிருக்கின்றார்கள்: அபூ சுஃப்யான் எப்படியாவது முஸ்லிம்களைத் தாக்குதல் நடத்துவதிலிருந்து தடுத்து நிறுத்தி வைப்பதற்காக மக்கத்தினர் அவரை அனுப்பினர். அபூசுஃப்யான் மதீனா சென்றடைந்து, ஹுதைபிய்யா நேரத்தில் (அபூசுஃப்யான் ஆகிய) அவர் இருக்கவில்லை. எனவே புதிதாக உடன்படிக்கை செய்வோம் என்பதில் (அபூசுஃப்யான் ஆகிய) அவர் அழுத்தம் கொடுக்கத் தொடங்கி விட்டார். ஆனால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரது கூற்றுக்கு எந்த விடையும் அளிக்கவில்லை. ஏனெனில் விடையளிப்பதால் இரகசியம் வெளிப்பட்டிருக்கும். அபூசுஃப்யான் அவநம்பிக்கை அடைந்த நிலையில், பதற்றமடைந்து பள்ளிவாயிலில் நின்றவாறு, ‘மக்களே! நான் மக்கத்தினர் சார்பாக புதிதாக உங்களுக்கு சமாதானத்திற்கான அறிவிப்பு செய்கிறேன்’ என்று அறிவித்தார். இதைக் கேட்டு அவரது அறியாமையைக் கண்டு முஸ்லிம்கள் சிரித்தனர். மேலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அபூசுஃப்யானே! நீர் இந்த விஷயத்தை

ஒருதலைப்பட்சமாகக் கூறிக் கொண்டிருக்கின்றீர். நாங்கள் உம்மிடம் அப்படிப்பட்ட எந்தவோர் உடன்படிக்கையும் செய்யவில்லை என்று கூறினார்கள்.

எந்நிலையிலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் இந்த நிகழ்வைப் பற்றி தமக்குரிய கோணத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் மைமூனா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: ஓர் இரவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனது முறையில் எனது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுது தொழுகைக்காக எழுந்து ஒளு செய்து கொண்டிருந்தவாறு கூறினார்கள். லப்பைக்க; லப்பைக்க; லப்பைக்க (நான் ஆஜராகி விட்டேன்; நான் ஆஜராகி விட்டேன்; நான் ஆஜராகி விட்டேன்) என்று அவர்கள் கூறும் சத்தம் எனக்குக் கேட்டது. அதற்குப் பிறகு நபி (ஸல்) அவர்கள், நுஸ்ரத்; நுஸ்ரத்; நுஸ்ரத் (உதவி; உதவி; உதவி) என்று கூறினார்கள். (ஹஸ்ரத் மைமூனா ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் வெளியே வருகை தந்தபோது, அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! யாராவது ஒரு மனிதர் வந்தாரா என்ன? நீங்கள் பேசிக் கொண்டிருந்தீர்களே! என்று நான் கேட்டேன். அப்போது நபி (ஸல்) அவர்கள், ஆம்! எனக்கு முன்னால் கஷ்ஃப் (எனும் ஆன்மிகக்) காட்சியாக خُزَاعَه (குஸாஆ) கோத்திரத்தின் ஒரு படைக் குழு முன்னால் வந்தது. அவர்கள், நாங்கள் முஹம்மதுக்கு அவருடைய இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறோம்: உம்முடனும், உம் மூதாதையர்களுடனும் நாங்கள் உடனடிக்கை செய்திருந்தோம். மேலும் நாங்கள் உமக்கு உதவி செய்து வந்திருக்கின்றோம். ஆனால் குரைஷியர்கள் எங்களுடன் செய்த உடன்படிக்கையை மீறி விட்டனர். எங்களில் ஒருவர் சஜ்தாவில், ஒருவர் ருகூவில் என இருந்த நிலையில், இரவு நேரத்தில் (குரைஷியர்களாகிய அவர்கள்) எங்களைத் தாக்கி எங்களுடைய மக்களைக் கொன்று விட்டனர். இப்போது நாங்கள் உமது உதவியைப் பெறுவதற்காக வந்திருக்கின்றோம் என்று கூறினர்.

சுருக்கமாக, (ஹஸ்ரத் மைமூனா ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (இவ்வாறு) கூறினார்கள்: خُزَاعَه (குஸாஆ) கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் நிற்கின்றார். கஷ்ஃப் (எனும் ஆன்மிகக்) காட்சியாக அந்த மனிதர் எனக்குத் தென்பட்டபோது, நான், ‘லப்பைக்க; லப்பைக்க; லப்பைக்க (நான் ஆஜராகி விட்டேன்; நான் ஆஜராகி விட்டேன்; நான் ஆஜராகி விட்டேன்)’ என்று கூறினேன். அதாவது நான் உனக்கு உதவி செய்வதற்காக ஆஜராகி விட்டேன் என்று மூன்றுமுறை கூறினேன். பிறகு

நுஸ்ரத்; நுஸ்ரத்; நுஸ்ரத் (உதவி; உதவி; உதவி) என்று கூறினேன். அதாவது உமக்கு உதவி செய்யப்படும். இதையும் நான் மூன்றுமுறை கூறினேன். பிறகு ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: அதே நாளில் காலைப்பொழுதில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனது வீட்டிற்கு வருகை தந்தார்கள். மேலும் خُزَاعَه (குஸாஆ)வுடன் ஒரு பயங்கரமான சம்பவம் நிகழ்ந்தது என்று அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறுகிறார்கள்: خُزَاعَه (குஸாஆ)வுடன் பயங்கரமான சம்பவம் என்றால், அவர்கள் மக்காவின் எல்லைப் புறத்தில் இருக்கின்றனர். மேலும் بَنُوْ بَكْر (பனூ பக்ர்) கோத்திரத்தைச் சேர்ந்தவர்களுடன் உடன்படிக்கையில் இருக்கின்ற மக்கத்தினர் خُزَاعَه (குஸாஆ கோத்திரத்தார்) மீது தாக்குதல் நடத்துவார்கள் என்பதுதான் பயங்கரமான சம்பவமாக இருக்க முடியும் என்று நான் புரிந்து கொண்டேன். (அதாவது ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் புரிந்து கொண்டார்கள்). நான், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவ்வளவு சத்தியங்கள் செய்த பிறகும் குரைஷியர்கள் உடன்படிக்கையை முறிப்பதற்கும், அவர்கள் خُزَاعَه (குஸாஆ கோத்திரத்தார்) மீது தாக்குதல் நடத்துவதற்கும் சாத்தியம் இருக்கிறதா என்று கேட்டேன். அதற்கு (நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள், ஆம்! அல்லாஹ்வின் ஞானத்தின் அடிப்படையில் அவர்கள் அந்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டிருக்கின்றனர் எனக் கூறினார்கள். மேலும் அந்த ஞானம் என்பது, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு (அவர்கள் மீது) தாக்குதல் நடத்துவதற்கு (அந்த உடன்படிக்கையில்) அனுமதி இருக்கவில்லை. மேலும் உடன்படிக்கை முறிந்ததால் (ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுக்குத் தாக்குதல் நடத்துவதற்கு அனுமதி கிடைத்து விட்டது. ஹஸ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அதன் விளைவு நல்லதாக இருக்குமா என்று நான் கேட்டேன். அவர்கள், விளைவு நல்லதாகத்தான் இருக்கும் என்று விடை கூறினார்கள்.

இன்னும் அதிகமான விளக்கம் இனிமேல் தொடரும் - இன்ஷா அல்லாஹ்.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* தற்போதைய நிலையில் ஈரான், இஸ்ரேல் போர்களை முன்னிட்டு துஆக்கள் செய்யுமாறு வலியுறுத்திக் கூறியவாறு, இந்த நேரத்தில் உலகின் பொதுவான நிலைகளுக்காகவும் நான் கூறுகிறேன். துஆக்களை செய்து வருங்கள் என்று பெரும்பாலும்

கூறி வந்திருக்கிறேன். போர் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. மேலும் அல்லாஹ் இந்தப் பேரழிவிலிருந்து நம்மைப் பாதுகாப்பானாக என்று துஆ செய்யுங்கள். ஏனெனில் இப்போதோ ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி விட்டது. மேலும் போரின் இந்த நிலை பயங்கரமான நிலையை அடைந்து விட்டது.

இஸ்ரேலிய அரசாங்கத்தைச் சேர்ந்த இவர்கள் ஒவ்வொன்றாக எல்லா முஸ்லிம் நாடுகளுக்கும் நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்றே விரும்புவார்கள். ஆனால் முஸ்லிம் நாடுகள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. தமது முன்னேற்றம், தமது மற்ற முன்னுரிமைகள் ஆகியவற்றிலேயே மூழ்கிக் கிடக்கின்றன. மேலும் என்ன நடக்கும் என்பதே அவர்களுக்குப் புரிவதில்லை. முஸ்லிம்களிடம் நற்செயலும் எஞ்சியிருக்கவில்லை; அவர்களுக்கு துஆவின் பக்கம் கவனமும் இல்லை. பிறகு அப்படி இருக்கும் நிலையில், ஏற்படவிருக்கும் நஷ்டத்தைப் பற்றி இவர்களால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அல்லாஹ் (முஸ்லிம்களாகிய) இவர்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும் அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தட்டும். மேலும் இவர்கள் தமது ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்யட்டும்.

இவர்கள் இன்ன பிரிவினர் ஆவர். அல்லது இவர்கள் இன்ன பிரிவினர் ஆவர். நாம் அவர்களுக்கு உதவி செய்யவில்லை என்பது (பிரச்சனை) அல்ல; அனைத்து நாடுகளும் அபாயத்தில் இருக்கின்றன. ஏனெனில் اَلْكُفْرُ مِلَّةٌ وَاحِدَةٌ (அல் குஃப்ரு மில்லத்துன்வ் வாஹிதா) என்ற நிலை உருவாகி விட்டது. அதாவது (இஸ்லாம் அல்லாத) மறுப்பாளர்கள் அனைவரும் ஒரு கூட்டமாக ஆகி விட்டனர். மேலும் இப்போது முஸ்லிம்களும் ஒரே கூட்டமாக ஆக வேண்டியது வரும். அப்போதுதான் அவர்கள் தப்பிக்க முடியும். அதைத் தவிர வேறு எந்த வழியுமில்லை. அல்லாஹ் ஒவ்வொரு குற்றமற்றவரையும், அநீதிக்குள்ளானவரையும் மிகப் பெரிய நஷ்டத்திலிருந்து காப்பாற்றுவானாக. மேலும் நாம் துஆவின் பக்கம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நலவாய்ப்பையும் வழங்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا

مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ

اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ

يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது H.A)**